மாயன்
பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Nature Description in Tembavani

Mrs. S.Elizabeth Rani

Assistant Professor, Department of Tamil, Ananda College, Devakottai, India

Manuscript ID : **MT1A0011**

Volume : **1**

Issue : **2**

Month : **December**

Year : **2021**

Received: 08.09.2021

Revised: 16.09.2021

Accepted: 02.10.2021

Published: 12.10.2021

Pages : 1-7

ABSTRACT:

It is natural for man's origin to be intertwined with the world in harmony with nature and to present it as a single object of consciousness. Literature has been written from antiquity to the present day with a focus on this nature and its theme. The literature thus created gives a kind of epistemological feeling not only to the text but also to all who read it. Thus, from time to time, the Sangam literatures and the copy literatures have a special place in the line of justice literatures. The study summary of this article reveals that Tembavani is located in a place where the country and the city featured in the epics are astonishingly beautiful.

KEYWORDS:

Folklore, Cityscape, Commentaries, Epics, Myths

REFERENCES :

1. KP Aravanan , Thirukkural, TamilKottam, First Edition 2007, Chennai.
2. Durai. Thandapani, Manimegalai, Uma Publishing, Third Edition 2003, Chennai.
3. Durai. Rasaram, Silappathikarama. Narmada Publishing, First Edition 2005, Chennai.
4. Co. Vilvapathi, Kambaramayanam (Palakandam), Asian Publishing, Fourth Edition 2006, Chennai.
5. N.M.Maria Arutprakasam, Tembavani (First Volume) Mavika Press, Second Edition 2007, Madurai.

தொகுதி-1 பதிப்பு-2 டிசம்பர் 2021 | E-ISSN: 2583-0449

தேம்பாவணியில் இயற்கை வருணனை

திருமதி. சி. எலிசபெத்ராணி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஆனந்தாகல்லூரி, தேவகோட்டை.

கட்டுரைச் சுருக்கம்

மனிதனின் தோற்றம் முதல், இயற்கையோடு இயைந்த உலகமாகப் பின்னிப்பிணைந்து ஒன்றினைந்த ஒரு உணர்வுப் பொருளாகக் காட்சியளிப்பது இயற்கை. இந்த இயற்கையை மையமாக வைத்தும், அதனைக் கருவாகக் கொண்டும் பழங்காலம் முதல் இன்றுவரை இலக்கியங்கள் எழுதப்படுகின்றன. அவ்வாறு படைக்கப்பட்ட இலக்கியங்கள், அந்நூலுக்கு மட்டும்மல்லாமல் அதனைப்படிக்கும் அனைவருக்கும் ஒருவிதமான இன்பியல் உணர்ச்சியை அளிக்கின்றது. அவ்வகையில் காலந்தோறும் சங்கஇலக்கியங்கள், நீதி இலக்கியங்கள் வரிசையில் காப்பிய இலக்கியங்களும் தனித்த இடத்தினைப் பெற்றுள்ளது. காப்பியங்களில் இடம் பெற்றநாடும், நகரமும் அவை அமையப்பெற்ற அழகினை, வியப்பூட்டும் வகையில் தேம்பாவணி அமைந்துள்ளது என்பதை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் ஆய்வுச்சுருக்கமாக அமைகிறது.

கருச்சொற்கள்

நாட்டுப்படலம், நகரப்படலம், வருணனைகள், காப்பியங்கள், இதிகாசங்கள், புராணங்கள்

முன்னுரை

காப்பியங்களில் பொதுவாக இயற்கை வருணனைகள் மிகுந்து காணப்படுவதுண்டு. இவை காப்பியத்தை சுவைப்பவரின் மனதிற்கு இன்பத்தை மிகுவிக்கும். காப்பியங்களில் பொருட்செறிவினை இயற்கையோடு இயற்கையாய் இயைத்துப் பாடும்போது மேலும் அதற்கு மெருகேற்றுவது போல அமைந்திருக்கும். உவமை,உருவகம் என அணிகளை அணிந்தாடச் செய்யும்போது இயற்கையழகு மிளிர்ந்து நிற்கின்றது. இயற்கை வருணனைகள் குறிப்பாக இலக்கியங்களில் உவமை, உருவகம், கற்பனையாகவென புரையோடிப் புணர்ந்திருக்கும். உள்ளதை உள்ளவாறே கூறி மெருகேற்றும்போது இயற்கையழகு கண்ணை மட்டுமல்லாமல் மனதிற்கும் குளிர்ச்சியூட்டி இதப்படுத்தும்.

காப்பியங்களில் இத்தகைய இயற்கை வருணனைகளைக் கதைமாந்தர்கள் வாழும் நிலப்பகுதியையொட்டி நாட்டுப்படலம், நகரப்படலம் என்று தனிப்பிரிவாக வருணித்து பேசப்படுகிறது. எத்தகைய படைப்பாயினும் அப்படைப்பின் தன்மை, அதன்நிலம் ஆகியவற்றிற்கேற்ப வருணனைகள் அமைக்கப்படுகிறது. வருணனைகள் இலக்கியத்தில் இடம்பெறும் போது இலக்கிய ஆசிரியனால் உண்மையான உணர்ச்சியுடன் பாடப்படவேண்டும். இலக்கியமானது வாழ்க்கையினை எடுத்தியம்பும்போது வருணனை நிறைந்த தொடர்களே அனுபவங்களாகப் பேசப்படுகின்றன. இவ்வாறு இயற்கை வருணனை மிகுந்த இலக்கியங்களின் பட்டியலில் காப்பியங்கள் அடங்கும். அத்தகைய ஒன்றில் தேம்பாவணியும் ஒன்று.

அதில் குறிப்பாக நாட்டுப்படலம், நகரப்படலம் இயற்கையை மிஞ்சி நிற்கும். அதைப்பற்றிக் காண்போம்.

பிறஇலக்கியங்களில்,

இலக்கியம் படைப்பதென்பது ஒருகலை. அக்கலையை வருவிக்கும்போது இயற்கை தொடர்பான செய்திகள் இலக்கியத்திற்கு மட்டுமல்லாமல் இலக்கியம் படைப்பவருக்கும் அப்படைப்பை ரசிப்பவருக்கும் மனதினை இதமூட்டுகிறது. அவ்வகையில் அனைத்து இலக்கியங்களிலுமே இயற்கை பற்றிய வருணனைச் செய்திகள் புரையோடிக் கிடப்பதைக் காணலாம். காப்பியங்களில் நாடு, நகர் பற்றிய வருணனை இடம்பெறுவதுண்டு. அவ்வகையில் சிலம்பில் முதன்முதலில் கடவுள்வாழ்த்தே இயற்கையைப்பற்றி வருணிக்கும் பாடலாக அமைந்துள்ளது.

“திங்களைப்போற்றுதும்திங்களைப்போற்றுதும்”

(சிலம்பு.மங்கலவாழ்த்துப்பாடல்)

இதேபோன்று மணிமேகலை விழாவறைக் காதையில்,

“உலகம்திரியாஓங்குஉயர்விழுசீர்ப்”

என்று கடவுள் வழிபாட்டில் இயற்கையைப் போற்றி வழிபடும் விதம் காப்பியங்களில் சிறந்து பேசப்படுகிறது. காப்பியங்களில் மட்டுமல்லாமல் இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றிலும் இயற்கை வருணனை மிகுதியாகப் பேசப்படுகிறது.

கம்பராமாயணத்தில் ஆற்றுப்படலம், நாடு, நகரப்படலம் என்றமைந்து இலக்கியத்திற்கு வளம் சேர்க்கிறது.

"ஆசலம்புரிஜம்பொறி

காசலம்பும்முலையவர்கண்எனும்"

(கம்ப.ஆற்றுப்படலம். ப.எண் 1)

ஆடவரும் பெண்டிரும் தீயவழியில் செல்லாத கோசலநாட்டை வளம்கொழிக்கச் செய்வது சரயுந்தி என்று வருணிக்கப்படுகிறது.

நாட்டுப்படலம்

நாட்டுப்படலம் தொடங்குவதே அந்நாட்டிற்கு அரணாய் அமைந்திருக்கும் ஆறு, மரம், செடி, கொடிமலை, விசும்பு என அனைத்தையும் அழகுற அமைப்பதாகும். தேம்பாவணியில், கரியமேகக்கூட்டம் ஆனது கரியமதயானைக் கூட்டத்தோடு ஒப்பிட்டு பாடப்படுகிறது. இதனை,

"புள்ளுலாம்விசும்பிடைதொறும்பொரும்படைபொருவ

வெள்ளுலாமழைவெண்கொடியுருக்கொடுவிளங்கித்"

(தேம்பா.நாடு.1)

மேகங்கள் கடல்நீரை முகந்துகொண்டு சென்று, கரியமேகக் கூட்டத்தினுள் முரசின் ஒலிபோல இடித்து, திசைதோறும் இருள்மறையும் வண்ணம் மின்னி மழைநீரைச் சொரிந்தன. மழைத்தாரைகள் ஆறுபோல் ஓடியது. தொடர்ந்து வரும் ஆறு, அவற்றால் வளமாகும் ஏரி, குளங்கள், இயற்கை உழவுத்தொழில் வளங்கள் என எண்ணிலடங்காவை

பார்வைக்கு இன்பமென்று உள்ளமானது அழகினை நுகர முற்படுமாயின் பார்க்கும் அனைத்துமே அழகு. நெல்லுக்கிடையே வளரும் களைச்செடியை உழத்தியர் பறித்துதெடுக்கும் அழகினை,

"நோக்கவின்புளநுகரவொண்முளரியோடாம்ப"

(தேம்பா.13)

இயல்பாகக் கனி முற்றியமரம் கீழே வளைவதை, வேருக்குநீரை அளித்ததற்கு முத்தமிடுவது போல அமைந்ததை,

“றடியிலாயிருரமைந்தநீர்தொழக்”

(தேம்பா.நாடு.18)

என்ற பாடலில் அறியலாம்.

உழவுத்தொழிலுக்குப் பயன்படும் ஆற்றுநீரை அணைகட்டி வாய்க்காலுக்குப் பாயவிடுவர் யூதேயர். அங்கு வயலுக்குச் செல்லும் நீரானது கரைகளிலுள்ள செடிகளுக்கும் சென்று பூத்துக் குலுங்குகிறது. மணம்பரப்பும் அம்மலர்களை,

“செறிஉலாம் புனல்சிறை செய்துபயன்பட ஒதுக்கி

வெறியுலாம் மலர் மிடைந்து அகல்வயல் வழிவிடுவர் ".

(தேம்பாவணி.நகர்.10)

என்று விளக்குகிறது. யூதேயாநாடு முழுவதும் பறவைகளின் ஒலி ஆரவாரங்களும், யாழ் ஒலிப்புகளும், குயில்கள் விரும்பிக் கூவுதலும், மலர்கள் பொழிதலும், நீண்டசோலைகள் தன்நிழலால் பார்ப்பவர் கண்களை சிறைப்படுத்தியும், பொன்போன்ற சிறகினையுடைய அன்னப்பறவைகள் வாழ்வதும், மகளிர் பார்ப்பதற்கு தம்கூந்தலில் பூவைச்சூடியும் ஆண்கள் காலில் வீரக்கழல் அணிந்தும், தாமரைமலரானது சூரியனின் அழகைக் காட்டுவதும், வண்டுகள் மலர்களில் தேனைக் குடிப்பதும், கடலானது குளிர்ச்சி பொருந்திய முத்துக்களை அளிக்கும் யூதேயநாடு என்றும் அந்நாடு பார்ப்பதற்கு நாடு முழுவதும் குவிந்துகிடக்கும் பொன்போலக் காணப்படுகிறது என்பதை,

“பொறையினோடுஇகல்பொதிர்ந்தபொன்மணி”

தேம்பா.நாடு. 35)

குற்றம் கூறி மயக்கமடையாத நாடு யூதேயநாடு, வண்டுகள் உராய்ந்து மலரிடையே காணும் புண்கள், அம்பு துளைப்பதால் ஏற்பட்டதல்ல என்பதை,

“மாலைமாறிவயங்கியமாமதி”

(தேம்பா.நாடு.76)

மரக்கொம்புகளில் புதுமலர்கள் பூத்திருப்பது தடாகத்தில் தாமரைமலர்கள் நிறைந்திருப்பது போன்றது என்று இயற்கையை இயற்கையோடு வருணிக்கும் பாங்கு,

“வாவிபங்கயமல்கியநாண்மலர்

வாவிபங்கயமல்கியமாண்பெனப்”

(தேம்பா.நாடு.82)

பாடல்களின் வழி அறியலாம். இத்தகைய செழுமைமிக்க பெருமை வாய்ந்தது யூதேயநாடு. அது அழகிய பெரியமணி போன்ற அழகுபுனைந்த எருசலேம் நகரை உடையது என்பதை,

“பாரணிந்தவணிக்கலப்பான்மையாற்”

(தேம்பா.நாடு.83)

என்ற பாடல்வழி அறியலாம்.இவ்வாறு தேம்பாவணி நாட்டுப்படலம் 83 பாடல்களிலும் இயற்கையழகு கொட்டிக் காணப்படுகிறது.

நகரப்படலம்

இரண்டாவது படலமான நகரப்படலத்தில் யூதேய நாட்டிலுள்ள எருசலேம் திருநகரத்தின் சிறப்பானது பேசப்படுகிறது. இதில் எருசலேம் மக்களின் வாழ்க்கை, அவர்களின் பாவ புண்ணிய வாழ்க்கையால் விளைந்துள்ள நகரமே எருசலேம் என்னும் திருநகர். அதனை விளக்கும் முகமாக அமைந்துள்ள இப்படலத்தில் இடையிடையே இயற்கையழகு அந்நகரத்தின் மதில்கள், கோட்டைகள், சுவர்கள், தொழில்கள், அந்நகரின் பெருமைகள், வாயில்கள், கோபுரங்கள், தெருக்கள் என அனைத்தும் இயற்கையோடு இயைத்து வருணித்துப்பாடுவது அந்நகருக்குப் பெருமை சேர்க்கிறது.

மானிடர்கள் விண்மீனுடைய வான்வீட்டிற்கு ஏறிச்செல்ல இதுவே வழி என எருசலேம் திருநகரை வானுலக அழகோடு ஒப்பிட்டுக் கூறுவது இயற்கை இன்பமானதென்பதை,

“விட்புலனகன்றுவாய்ந்தவீட்டிடைவழங்குமாட்சி”

(தேம்பா.நகர்.3)

என்றும், நகரின் வாயில்கள் ஒளிபொழிந்து சுடர்விடுவது போன்றுள்ளது என்பதை,

“சோதிபெய்யறத்தின்பண்பாற்சுடர்நகர்திறந்தவாயில்”

(தேம்ப.-நகர்.13)

இயற்கையாய் உள்ள தூண்களை, ஒளிபொதிந்த செம்பளத்தாலான திருந்தச்செய்த, அழகிய நகரத் தூண்களை,

"தேசூழ்செந்துகிர்திருந்துங்காலின்மேற்"

(தேம்பா.நகர்.29)

எருசலேம் ஆலயமானது எங்கும் ஒளிரும் விளக்குகளைக் கொண்டுள்ளது. இதுபார்ப்பதற்கு கதிர்திரளைப் பொழியும் ஒளிவிளக்கு என்றும், பவளத்தோடு இடையே கலந்த முத்துக்களுமென இனிமையாய் பாடுவதை,

"தீயெரிவாய்ந்தகுருமணியாதிசெறிந்தபன்மணிகளுமகன்ற"

(தேம்பா.நகர்.46)

அறியலாம்.

இசைப்பாடல்களைக் கேட்டு செய்யுட்பாக்கள் நாணுவதும், மணி ஒளிகண்டு பகலொளி நாணும் என்ற ஒவ்வொரு செயலையும் நாணும் எனும் வகையில் இயற்கையோடு ஒருமிப்பது, கலைக்கும், காதிற்கும், மனதிற்கும் இரசமாகிறது.

முடிவுரை

காப்பிய வளங்களுக்குட்பட்டு தேம்பாவணி நாட்டுப்படலத்தில் நாட்டு, நகரச்சிறப்புகள், மலைப்பகுதியும் அம்மலையிலிருந்து வழிந்து ஓடும் ஆற்றுப்பகுதி, அவை வளம் கொழிக்கும் வயல் சூழ்பகுதிகள், அவற்றால் வளம்கொழிக்கும் செடி, கொடிகள் என இயற்கை மனதிற்கு குளிரூட்டுகிறது.

அதேபோன்று நகர்ப்பகுதியும் இயற்கையாய் எழில்மிகு மாடங்கள், கோபுரங்கள், அழகியமதில்கள், மாளிகைகள் எருசலேம் திருநகர், கோவில் விளக்குகள் பார்ப்பதற்கு இயற்கையை விஞ்சி நிற்கின்றன. நாட்டுப்படலம் யூதேயாமலை நாட்டையும், நகரப்படலம் எருசலேம் திருநகரையும் அழகுற வருணிக்கிறது.

இத்தகைய சிறப்பால் தேம்பாவணி எனும் கிறித்தவசமயக் காப்பியம் பிற இலக்கியங்கள் போன்றும், பிறசமய இலக்கியங்கள் போன்றும் காப்பிய இலக்கணத்திற்குட்பட்டு நாடு, நகர வருணனையில் மிளிர்ந்து ஒளிருகின்றது. கட்புலனாகாத இயற்கையை கண்ணுக்கு விருந்தளிக்கும் இலக்கியங்களில் காப்பிய இயற்கை கண்ணுக்கு மட்டுமல்லாமல் மனதிற்கும் குளிர்ச்சியை நல்குகிறது என்பதில் தேம்பாவணி தேர்ந்து விளங்குகிறது.

அடிக்குறிப்புகள்

1. துரை.இராசாராம் .சிலம்பு.மங்கலவாழ்த்து பா .எண் 1
2. கோ. வில்வபதி, கம்பராமாயணம் (பாலகாண்டம்), ஆற்றுப்படலம், பா .எண் 1
3. ந.ம.மரிய அருட்பிரகாசம், தேம்பாவணி (முதற்தொகுதி), நாட்டுப்படலம் பா .எண் 1
4. ந.ம.மரிய அருட்பிரகாசம், தேம்பாவணி (முதற்தொகுதி), நாட்டுப்படலம் பா .எண் 13
5. மேலது, நாட்டுப்படலம் பா.எண் 18
6. மேலது, நகரப்படலம் பா.எண் 10
7. மேலது, நாட்டுப்படலம் பா.எண் 35
8. மேலது, நகரப்படலம் பா.எண் 76
9. மேலது, நாட்டுப்படலம் பா.எண் 83
10. மேலது, நகரப்படலம் பா.எண் 3
11. மேலது, நகரப்படலம் பா.எண் 13
12. மேலது, நகரப்படலம் பா.எண் 29
13. மேலது, நகரப்படலம் பா.எண் 46

துணைநூற்பட்டியல்

1. திருக்குறள், க.ப அறவாணன், தமிழ்க்கோட்டம், முதல் பதிப்பு 2007, சென்னை.
2. மணிமேகலை, துரை. தண்டபாணி, உமா பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 2003, சென்னை.
3. சிலப்பதிகாரம்,துரை. இராசாராம், நர்மதா பதிப்பகம், முதல் பதிப்பு 2005, சென்னை.
4. கம்பராமாயணம் (பாலகாண்டம்), கோ. வில்வபதி, ஏஷியன் பதிப்பகம், நான்காம் பதிப்பு 2006, சென்னை.
5. தேம்பாவணி (முதற்தொகுதி), ந.ம.மரிய அருட்பிரகாசம், மாவிகா அச்சகம், இரண்டாம் பதிப்பு 2007, மதுரை.